AL/2021(2022)/12/T

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

සාමාන්‍ය පොදු පරීක්ෂණය
பொதுச் சாதாரணப் பரீட்சை
Common General Test

**12 T**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**
- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- **கணிப்பான்கள் பயன்படுத்த இடமளிக்கப்படமாட்டாது.**
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** 48 000 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் ஆபிரிக்காவுக்கு வெளியிலான ஓர் இடத்தில் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டவையாக இனங்காணப்பட்டுள்ள அம்பு - வில் தொழினுட்பத்தைச் சேர்ந்த பழமையான ஒரு தொகுதிப்பொருள்கள் தொல்பொருள் ஆய்வாளர்களால், இலங்கையின் குகையொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அக் குகை எது?
(1) லாஹுகலை குகை
(2) பாகியன்கல குகை
(3) பன்னிலை குகை
(4) ராவணா எல்ல குகை
(5) ரொட்டுபிஹில்ல குகை

**2.** மன்னாரில் அமைந்துள்ள தம்பபவனி மின்வலு நிலையம் 2020 டிசெம்பர் மாதத்தில் தேசிய மின்வலுத் தொகுதியுடன் இணைக்கப்பட்டது. அது ஒரு
(1) நிலக்கரி மின்வலு நிலையம் ஆகும்.
(2) டீசல் மின்வலு நிலையம் ஆகும்.
(3) நீர் மின்வலு நிலையம் ஆகும்.
(4) சூரிய மின்வலு நிலையம் ஆகும்.
(5) காற்று மின்வலு நிலையம் ஆகும்.

**3.** இலங்கையில் சில பிரதேசங்களில் சோளப் பயிர்ச்செய்கையினை சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் 'சேனை' என உள்ளூரில் அழைக்கப்பட்ட ஒருவகை மயிர்க்கொட்டிகள் தாக்கத்துக்கு உள்ளாக்கியது. இம்மயிர்க்கொட்டிகளைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட மற்றுமொரு பெயர் யாது?
(1) த போல் ஆர்மி வோர்ம் (The Fall Army Worm)
(2) றைஸ் ஆர்மி வோர்ம் (Rice Army Worm)
(3) பீட் ஆர்மி வோர்ம் (Beet Army Worm)
(4) சதேர்ன் ஆர்மி வோர்ம் (Southern Army Worm)
(5) ட்ரு ஆர்மி வோர்ம் (True Army Worm)

**4.** பின்வருவனவற்றுள் 2021 ஜுன் மாதத்தில் நடைபெற்ற 2019-2021 ICC உலக டெஸ்ட் கிரிக்கெட் வெற்றிக்கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் போட்டியிட்ட இரண்டு நாடுகளும் எவை?
(1) அவுஸ்ரேலியா, இந்தியா
(2) இங்கிலாந்து, நியூசிலாந்து
(3) இங்கிலாந்து, இந்தியா
(4) இங்கிலாந்து, அவுஸ்ரேலியா
(5) நியூசிலாந்து, இந்தியா

**5.** 2021 இல் உள்நாட்டு சந்தையில் விற்பனையாகிய தேங்காய் எண்ணெயின் தரம் தொடர்பில் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. அதன் மூலம் அபாயகரமான சேதனம் அடங்கியிருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட சேர்வையின் பெயர் என்ன?
(1) அசிற்றோன்
(2) அசிற்றமைட்டு
(3) அசிற்றேற்று
(4) அஃப்லாரொக்சின்
(5) அலுமினியம்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

6. கன்யா டி அல்மேடா (Kanya D' Almeida) 2021 இல் ஒரு குறித்த சர்வதேச இலக்கிய விருதை வென்ற முதலாவது இலங்கையர் எனும் சிறப்பைப் பெற்றார். அவர் பெற்ற விருதின் பெயர் யாது?
(1) பொதுநலவாய நூல் விருது
(2) பொதுநலவாய எழுத்தாளர் விருது
(3) பொதுநலவாய சிறுகதை விருது
(4) லண்டன் மகசின் சிறுகதைப் போட்டி
(5) சர்வதேச புக்கர் விருது

7. பின்வருவனவற்றுள் கொரோனா வைரசு நோய் - 2019 (COVID - 19) இற்கு எதிராகப் **பயன்படுத்தப்படாத** தடுப்பு மருந்து எது?
(1) அந்திராட்சு
(2) கொவக்சின்
(3) மொடர்னா
(4) ஒக்ஸ்பர்ட் - அஸ்ராசெனிக்கா
(5) பைசர் - பயோஅன்ட்ரெக்

8. 2021 மே மாதத்தில் இரசாயனப் பொருள்களைச் சுமந்து வந்த, பண்டப் போக்குவரத்து கப்பலொன்று, சூழலில் பாரிய அழிவை ஏற்படுத்தியவாறு இலங்கை கரையோரத்திற்கு அப்பால் தீப்பற்றிக்கொண்டது. அக்கப்பலின் பெயர் யாது?
(1) MV ஸீ ஸ்டார்
(2) MT நிவ் டயமன்ட்
(3) MV கன்செப்சன்
(4) MV கலம்பு எக்ஸ்பிரஸ்
(5) எக்ஸ் - பிரஸ் பேர்ள்

9. வீட்டில் செய்யப்படும் பின்வரும் எந்தச் செயல் சூழலுக்கு தீங்கு பயக்கக்கூடியது?
(1) மாமிச உணவுகளைக் குறைவாக உண்ணல்
(2) சில மரங்களை நடுதல்
(3) மின்கலவடுக்கு (பற்றரி) பயன்பாடு
(4) ஞாயிற்று (சூரிய) வலுசக்திப் பயன்பாடு
(5) LED மின்குமிழ்ப் பயன்பாடு

10. 2021 ஜுலை 11 ஆம் திகதி ரிசட் பிரென்சன் (Richard Branson) உட்பட ஒரு தொகுதிப் பயணிகளை குறை ஒழுக்கு விண்வெளிக்கு ஏற்றிச்சென்ற விண்வெளி ஓடத்தின் பெயர் யாது?
(1) சென்ஷவ் - 12
(2) நிவ் ஷெபர்ட்
(3) ஸ்பேஸ் ஷிப் டு
(4) வேர்ஜின் கலக்டிக் யுனிட்டி - 22
(5) ஸ்பேஸ்எக்ஸ் க்ரு - 2

11. ஒரு தொழிற்சாலையில் ஒரே பொருளை உற்பத்திசெய்யும் A, B எனும் இரண்டு பொறிகள் உள்ளன. பொறி A ஆனது 32 பொதிகளை உற்பத்தி செய்வதற்கு 6 மணித்தியாலங்களையும் பொறி B ஆனது 40 பொதிகளை உற்பத்தி செய்வதற்கு 5 மணித்தியாலங்களையும் எடுக்கிறது. இரண்டு பொறிகளும் ஒரே நேரத்தில் இயங்க ஆரம்பிக்குமாயின், 220 பொருள்களை உற்பத்தி செய்வதற்காக அப்பொறிகளுக்கு செலவாகும் நேரம் எவ்வளவு?
(1) 08 மணி 15 நிமிடம்
(2) 14 மணி 30 நிமிடம்
(3) 16 மணி 15 நிமிடம்
(4) 16 மணி 20 நிமிடம்
(5) 16 மணி 30 நிமிடம்

12. இருவர், புகையிரதப் பாதையொன்றிற்கு சமாந்தரமான ஒரே திசையில் 2 km $h^{-1}$ , 3 km $h^{-1}$ வேகங்களில் பயணித்துக்கொண்டிருந்தனர். அதே திசையில் பயணிக்கும் புகையிரத எஞ்சினானது இருவரையும் முறையே 9 செக்கனிலும் 12 செக்கனிலும் முற்றாகக் கடந்துசென்றது. இப்புகையிரத எஞ்சினின் நீளம் யாது?
(1) 10 m (2) 12 m (3) 15 m (4) 16 m (5) 18 m

13. திரு. சில்வா ஒரே நாளில் ரூ. 150 000 பெற்ற பணத்தை *A*, *B* எனும் இரண்டு வங்கிகளில் முறையே 8%, 10% வருட எளிய வட்டி விகிதத்தின் கீழ் வைப்புச் செய்தார். இரண்டு வருடங்களின் பின்னர் அவரது இரண்டு வைப்புக்களுக்காகவும் மொத்தமாக ரூ. 27 200 இனை வட்டியாகப் பெற்றார். அவர் ஆரம்பத்தில் வங்கி *B* இல் வைப்புச் செய்த பணத்தொகை எவ்வளவு?
(1) ரூ. 70 000 (2) ரூ. 75 000 (3) ரூ. 78 000 (4) ரூ. 80 000 (5) ரூ. 82 000

14. திருமதி பெரேரா, மொத்த விற்பனை நிலையமொன்றிலிருந்து ஓர் இறவுக்கை ரூபாய் 375 வீதம் 120 இறவுக்கைகளைக் கொள்வனவு செய்தார். அவற்றை அவரது களஞ்சியசாலைக்கு கொண்டு செல்வதற்கு ரூ. 1200 செலவாகியது. மேலும் அயன் பண்ணுவதற்கு ஒரு இறவுக்கைக்கு ரூ. 25 ம் செலவாகியது. அத்தோடு அவற்றை பொதிசெய்வதற்கு ரூ. 2400 இனைச் செலவிட நேர்ந்தது. இப்போது அவர் ஒவ்வொரு இறவுக்கையையும் 30% இலாபத்துடன் விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளார் எனின், ஒரு இறவுக்கையின் விற்பனை விலை எவ்வளவாக இருத்தல் வேண்டும்?
(1) ரூ. 515 (2) ரூ. 559 (3) ரூ. 560 (4) ரூ. 585 (5) ரூ. 595

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

69944

**15.** தாம் $60\ km\ h^{-1}$ கதியில் செல்வதாயின், நண்பகல் 12.00 மணிக்கு $X$ எனும் இடத்தை அடையலாம் எனவும் $75\ km\ h^{-1}$ கதியில் செல்வதாயின் முற்பகல் 11.30 மணிக்கு அந்த இடத்தை அடையலாம் எனவும் பந்துல்ல தனது பயணத்தைத் தொடங்க முன்னர் அனுமானித்தார். அதற்கமைய அவர் முற்பகல் 11.35 மணிக்கு $X$ எனும் இடத்தை சென்றடைந்தார். அவர் பயணம் செய்த சராசரிக்கதி எவ்வளவு?

(1) $70\ km\ h^{-1}$ (2) $71\ km\ h^{-1}$ (3) $72\ km\ h^{-1}$ (4) $73\ km\ h^{-1}$ (5) $74\ km\ h^{-1}$

**16.** பானவகையொன்றை தயாரிப்பதற்கு A வகைச் சாறும் B வகைச்சாறும் முறையே 4 : 3 விகிதத்தில் பாத்திரமொன்றினுள் கலக்கப்பட்டன. அப்பாத்திரத்திலிருந்து, பருகுவதற்காக 7 லீற்றர் பானம் எடுக்கப்பட்ட பின்னர், A வகைச் சாறுக்கும் B வகைச் சாறுக்கும் இடையிலான விகிதம் 4 : 5 ஆகுமாறு B வகையைச் சேர்ந்த சாறு 7 லீற்றர் அப்பாத்திரத்தில் சேர்க்கப்பட்டது. பாத்திரத்தினுள் ஆரம்பத்தில் A வகைச்சாறு எத்தனை லீற்றர் பயன்படுத்தப்பட்டது?

(1) 12 லீற்றர் (2) 15 லீற்றர் (3) 18 லீற்றர் (4) 22 லீற்றர் (5) 36 லீற்றர்

**17.** அசித்த, 45 மாணவர்கள் உள்ள அவனது வகுப்பில் கணித பாடச் சோதனையின் சராசரிப்புள்ளி 52 எனக் கணித்தான். எனினும் சராசரிப்புள்ளியைக் கணிப்பதற்காக அசித்த பயன்படுத்திய புள்ளிகளுக்கு இடையே 81, 72, 63 ஆகிய சரியான மூன்று புள்ளிகளுக்குப் பதிலாக முறையே 18, 27, 36 என தவறான மூன்று புள்ளிகள் பதிவு செய்யப்பட்டமையை ஆசிரியர் கண்டறிந்தார். இக்கணித சோதனையின் சரியான சராசரிப்புள்ளி எவ்வளவு?

(1) 54 (2) 55 (3) 56 (4) 57 (5) 59

**18.** நில அளவையாளர் ஒருவர் சதுரவடிவான காணித்துண்டொன்றின் ஒருபக்க நீளத்தை அளக்கும் போது சரியான பெறுமானத்திலும் 3% கூடுதலாக அமையுமாறு வழுவுடன் கூடிய அளவீடொன்றைப் பெற்றார். பின்னர், அப்பெறுமானத்தைப் பயன்படுத்தி, அவர் சதுரக் காணித்துண்டின் பரப்பளவைக் கணித்தார். அப்பரப்பளவுக் கணித்தலின் சதவீத வழு எவ்வளவு?

(1) 1.06 % (2) 3.09 % (3) 4.09 % (4) 5.09% (5) 6.09 %

**19.** கடிகாரமொன்று நேரத்தைக் கூடுதலாகக் காட்டியவாறு சீரான வேகத்தில் இயங்குகிறது. அது காட்டும் நேரம் ஞாயிற்றுக்கிழமையொன்றில் முற்பகல் 11.00 மணிக்கு 3 நிமிட நேரம் பின்தங்கியிருந்ததோடு, அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 6.00 மணிக்கு 5 நிமிடம் 45 செக்கன் முன்சென்றிருந்தது. இக்காலப்பகுதியில் அக்கடிகாரம் சரியாக நேரத்தைக் காட்டியது எச்சந்தர்ப்பத்திலாகும்?

(1) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 (2) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 10.00
(3) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 11.00 (4) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 11.30
(5) புதன்கிழமை பிற்பகல் 11.00

**20.** நான்கு வருடங்களுக்கு முன்னர் திரு. பர்னாந்து, அவரது மனைவி, அவர்களது மகள் ஆகியோரின் சராசரி வயது 25 வருடங்களாக இருந்ததோடு, ஆறு வருடங்களின் முன்னர், திருமதி பர்னாந்து அவரது மகள் ஆகியோரின் சராசரி வயது 22 வருடங்களாக இருந்தது. திரு. பர்னாந்துவின் தற்போதைய வயது என்ன?

(1) 29 வருடங்கள் (2) 30 வருடங்கள் (3) 31 வருடங்கள் (4) 32 வருடங்கள் (5) 35 வருடங்கள்

**21.** வன்மை, பாயும் தன்மை, சூடு ஆகிய மூன்று இயல்புகளுள் மிகக் கூடுதலான இயல்புகளைக் கொண்ட பொருள் பின்வருவற்றுள் எது?

(1) எரிமலைக்குழம்பு (2) கொதிநீராவி (3) புகை (4) சீமெந்து (5) தீ

**22.** அக்மல் ஐந்து வருடங்களுக்கு முன்னர் உருக்கு கூர்த்தலையையும் மரக்கைப்பிடியையும் கொண்ட கோடரி ஒன்றினைக் கொள்வனவு செய்தான். அவன் ஒவ்வொரு எட்டு மாதங்களுக்கு ஒரு தடவை கூர்த்தலையையும் ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை அதன் கைப்பிடியையும் மாற்றினான். முதன்முதலாக கோடரியைக் கொள்வனவு செய்த பின்னர், எத்தனை தடவைகள், புதிய கோடரியொன்றின் உரிமையாளராகும் பாக்கியத்தை அவன் அனுபவித்துள்ளான்.

(1) ஒரு தடவை (2) இரண்டு தடவைகள்
(3) மூன்று தடவைகள் (4) நான்கு தடவைகள்
(5) ஒரு தடவையுமில்லை


**23.** ஒரு கிணற்றின் அடியில் வாழும் தவளையொன்றும் தேரையொன்றும் ஒரே கணத்தில் கிணற்றின் சுவரின் வழியே ஏறத்தொடங்குகின்றன. மீண்டும் ஒவ்வொரு நிமிட நேர இடைவெளியிலும் தவளை, அந்த நிமிடத்தின் ஆரம்பத்தில் கிணற்று விளிம்பிலிருந்து ஏறவேண்டிய மொத்த அளவில் சரிபாதியளவு மேலே ஏறுகிறது. தேரையும் அவ்வாறே மேலே ஏறுவதோடு, நிமிடத்தில் கடந்து செல்லும் தூரம், கிணற்று விளிம்பிலிருந்து ஏற வேண்டிய மொத்த தூரத்தின் மூன்றிலொரு பகுதியாகும். பயணத்தை ஆரம்பித்த கணத்திலிருந்து இரண்டு நிமிட நேரம் கழித்த பின்னர் அவை இரண்டுக்கும் இடையிலான இடைவெளி 7 m எனின், அக்கிணற்றின் ஆழம் எவ்வளவு?

(1) 32 m (2) 34 m (3) 36 m (4) 40 m (5) 64 m


[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,

**24.**





உருவில் காட்டப்பட்டுள்ள கடிகார முகப்பின் சரியான தளவாடி விம்பத்தைக் காட்டி நிற்கும் உரு பின்வருவனவற்றுள் எது?





(1) (2) (3) (4) (5)

**25.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு உருவிலும் சதுரமுகியொன்றின் திறந்த முகப்புக்களில் உள்ள உருவங்கள் தரப்பட்டுள்ளன.




மேற்படி சதுரமுகியை அமைப்பதற்கு பின்வரும் எந்த மாதிரியுருவைப் பயன்படுத்தலாம்?



(1) (2) (3) (4) (5)

- **26, 27** ஆகிய வினாக்கள் ஐந்து வருட காலத்தினுள் முறையே, ஒவ்வொரு வருடத்தினதும் $A, B, C, D, E$ ஆகிய ஐந்து கம்பனிகளின் விற்பனை அளவுகளைக் காட்டும் பின்வரும் வரைபினை அடிப்படையாகக் கொண்டவை.




**26.** இக்காலப் பகுதியில் மிகக்கூடிய விற்பனை வளர்ச்சி வேகத்தைக் கொண்ட கம்பனி எது?

(1) *A* (2) *B* (3) *C* (4) *D* (5) *E*

**27.** இக்காலப் பகுதியில் விற்பனையில் மிகக் கூடுதலான உறுதிப்பாட்டைக் காட்டும் கம்பனி எது?

(1) *A* (2) *B* (3) *C* (4) *D* (5) *E*



Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

69944

● **28, 29** ஆகிய ஒவ்வொரு வினாவின் கீழும் தரப்பட்டுள்ள நான்கு கூற்றுகளையும் $(A)$ உறுதியாக நிகழ்கின்ற, $(B)$ நிகழக்கூடிய, $(C)$ நிகழும் வாய்ப்புக் குறைவான, $(D)$ ஒருபோதும் நிகழாத என வகைப்படுத்த வேண்டியுள்ளது.

**28.** 1. 14 பேரைக் கொண்ட ஒரு குழுவில் ஒரே மாதத்தில் பிறந்த இருவர் உள்ளனர்.
2. எந்த மூன்று நேர்கோடுகளும் ஒரே புள்ளியில் சந்திக்கும்.
3. கோடாத நாணய குற்றியினை 100 தடவைகள் மேலே சுண்டிய போது 99 தடவைகள் கிடைத்த பெறுபேறு தலை ஆகும்.
4. $x^2 = 1$ ஆகும் போது $x = 1$ ஆகும்.

மேற்படி நான்கு கூற்றுகளையும் ஒழுங்குமுறைப்படி வகைப்படுத்தினால் கிடைப்பது

(1) C, D, D, A ஆகும். (2) B, B, D, A ஆகும். (3) B, A, D, B ஆகும்.
(4) A, D, C, B ஆகும். (5) A, B, D, A ஆகும்.

**29.** 1. தமது பிள்ளைகள் ஆறுபேரும் பெண்பிள்ளைகளாகக் கொண்ட ஒரு தாய் மேலுமொரு பெண்பிள்ளையைப் பெற்றெடுக்கிறார்.
2. எந்த மூன்று நேர்கோடுகளும் ஒரே புள்ளியில் சந்திக்குமாயின், அப்போது எந்த நான்கு நேர்கோடுகளும் ஒரே புள்ளியில் சந்திக்கும்.
3. கோடாத நாணயக் குற்றியினை 10 தடவைகள் மேலே சுண்டிய போது 5 தடவைகள் கிடைத்த பெறுபேறு தலை ஆகும்.
4. எல்லாப் பறவைகளுக்கும் பறக்க முடியும்.

மேற்படி நான்கு கூற்றுகளையும் ஒழுங்குமுறைப்படி வகைப்படுத்தினால் கிடைப்பது

(1) B, A, A, B (2) B, A, B, D (3) C, B, B, C
(4) C, B, C, D (5) C, D, A, B

● **30** தொடக்கம் **32** வரையிலான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

பாடசாலைத் தோட்டத்தில் பழமரங்களுக்குத் தடியால் அடித்து ஏழு மாம்பழங்களையும், ஐந்து தோடம்பழங்களையும் நிலத்தில் வீழ்த்திய குற்றத்துக்காக ஐந்து மாணவர்களை அழைத்து அவ்வொவ்வொரு மாணவரும் பறித்த பழங்களின் எண்ணிக்கை குறித்து வினவிய போது அவர்கள் வழங்கிய பதில்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அமல் – ஒரு மாம்பழமும் ஒரு தோடம்பழமும் மாத்திரம்
பவன் – இரண்டு மாம்பழங்களும் ஒரு தோடம்பழமும் மாத்திரம்
காசிம் – இரண்டு மாம்பழங்கள் மாத்திரம்
டேவிட் – ஒரு மாம்பழமும் இரண்டு தோடம்பழங்களும் மாத்திரம்
எமில் – ஒரு தோடம்பழம் மாத்திரம்

**30.** ஒருவர் மாத்திரம் பொய் சொல்கிறார் எனின், அவர் உண்மையில் ஒரு மாம்பழமும் ஒரு தோடம்பழமும் மாத்திரம் பறித்தார் எனின், அவர் யாராக இருக்க முடியும்?

(1) அமல் (2) பவன் (3) காசிம் (4) டேவிட் (5) எமில்

**31.** ஒருவர் மாத்திரம் பொய் சொல்கிறார் எனின், அவர் உண்மையில் மூன்று மாம்பழங்களும் ஒரு தோடம்பழமும் மாத்திரம் பறித்துள்ளார் எனின், அவர் யாராக இருக்க முடியும்?

(1) அமல் (2) பவன் (3) காசிம் (4) டேவிட் (5) எமில்

**32.** உண்மை சொல்லுவோரினால் பறிக்கப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கை நான்கும், பொய் சொல்வோரினால் பறிக்கப்பட்ட தோடம்பழங்களின் எண்ணிக்கை இரண்டும் எனின், உண்மையில் அமல் பறித்தவை யாவை?

(1) இரண்டு மாம்பழங்கள் மாத்திரம்
(2) ஒரு தோடம்பழம் மாத்திரம்
(3) ஒரு மாம்பழமும் ஒரு தோடம்பழமும் மாத்திரம்
(4) ஒரு மாம்பழமும் இரண்டு தோடம்பழங்களும் மாத்திரம்
(5) மூன்று மாம்பழங்களும் ஒரு தோடம்பழமும் மாத்திரம்

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

- **33** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் பீகிப்து, சீகிப்து எனும் புனையப்பட்ட இரண்டு இராசதானிகளை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றுள் ஓர் இராசதானியில் அடி 2 இல் எண்கள் எழுதப்பட்டுள்ளதோடு மற்றைய இராசதானியில் அடி 3 இல் எண்கள் எழுதப்பட்டுள்ளன. மேலும் அவர்களுக்கேயுரிய எண் குறியீட்டுத் தொகுதியொன்றையும் பயன்படுத்தினர். பீகிப்து மக்கள் ~@~ என எழுதிய எண்ணை சீகிப்து மக்கள் &# என எழுதினர்.

**33.** பீகிப்து மக்கள் ~~~ என எழுதிய எண்ணை சீகிப்து மக்கள் எவ்வாறு எழுதினர்?
(1) &# (2) #& (3) $& (4) ### (5) &&&

**34.** சீகிப்து மக்கள் ## என எழுதிய எண்ணை பீகிப்து மக்கள் எவ்வாறு எழுதினர்?
(1) ~@@ (2) ~~@ (3) @~~ (4) ~@@@ (5) ~@~@

**35.** சீகிப்து மக்கள் &$ என எழுதிய எண்ணை பீகிப்து மக்கள் எவ்வாறு எழுதினர்?
(1) ~~ (2) ~~@ (3) $~~ (4) ~@* (5) ~@~

- **36** தொடக்கம் **38** வரையிலான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

மத்திய மகா வித்தியாலயமொன்றினது க.பொ.த.(உயர் தரம்) - 2020 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள், பொதுச் சாதாரணப் பரீட்சையில் மிகக்கூடுதலான புள்ளிகள் பெற்ற ஏழு பேர் புலமைப்பரிசில் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டனர். மிகக் கூடுதலான புள்ளிகள் பெற்ற இந்த ஏழு பேருள் பௌதீகவியல் துறை மாணவர்கள் இருவர், உயிரியல் துறை மாணவர் ஒருவர், தொழினுட்பவியல் துறை மாணவர்கள் இருவர், வணிகத்துறை மாணவர் ஒருவர், கலைத்துறை மாணவர் ஒருவர் அடங்கியுள்ளனர். அவர்களுள் எந்த இருவரதும் பொதுச் சாதாரண பரீட்சைப் புள்ளிகள் சமமானவை அல்ல.

✳ தொழினுட்பவியல் துறை மாணவர்களுக்கு முதலாம் இடமோ ஐந்தாம் இடமோ கிடைக்கவில்லை.
✳ வணிகத்துறை மாணவனுக்கு இரண்டாம் இடமோ ஆறாம் இடமோ கிடைக்கவில்லை.
✳ கூடிய புள்ளிகள் பெற்ற தொழினுட்பவியல் துறை மாணவன் பெற்ற இடத்துக்கும், வணிகத்துறை மாணவன் பெற்ற இடத்துக்கும் இடையே ஒரு மாணவன் மாத்திரம் உள்ளனர்.
✳ கலைத்துறை மாணவன் பெற்ற இடம், குறைந்தபுள்ளி பெற்ற தொழினுட்பத்துறை மாணவன் பெற்ற இடத்துக்கு பின்னர் வரும் அடுத்த இடமாகும்.
✳ உயிரியல் துறை மாணவன் பெற்ற இடம், உயர்புள்ளி பெற்ற பௌதிகவியல் துறை மாணவன் பெற்ற இடத்துக்கு பின்னர் வரும் அடுத்த இடமாகும்.

**36.** க.பொ.த.(உயர் தரம்) - 2020 பரீட்சையின் பொதுச் சாதாரணப் பரீட்சைக்காக இப்பாடசாலையிலிருந்து மிகக்கூடுதலான புள்ளி பெற்ற மாணவன் எந்தப் பாடத்துறையைச் சேர்ந்தவராவார்?
(1) பௌதிகவியல் (2) உயிரியல்
(3) தொழினுட்பவியல் (4) வணிகவியல்
(5) கலை

**37.** ஏழாம் இடத்துக்குத் தெரிவாகிய மாணவன் எந்தப் பாடத்துறையைச் சேர்ந்தவர்?
(1) பௌதிகவியல் (2) உயிரியல்
(3) தொழினுட்பவியல் (4) வணிகவியல்
(5) கலை

**38.** தொழினுட்வியற் துறை மாணவர்கள் இருவரும் எந்தெந்த இடங்களுக்குத் தெரிவாகினர்?
(1) 2 உம் 3 உம் (2) 2 உம் 4 உம் (3) 2 உம் 6 உம் (4) 3 உம் 6 உம் (5) 4 உம் 6 உம்

**39.** பின்வரும் முடிவை பலவீனமடையச் செய்யும் பலமான சாட்சியை (உண்மை எனின்) தெரிவுசெய்க.
"தற்காலத்தில் எந்தக் கப்பலிலாயினும், ஒவ்வொரு மணித்தியாலத்திலும் அதன் அமைவிடத்தை பதிவு செய்யும் பதிவுக்கருவியொன்று உள்ளது."
(1) புதியதொரு கப்பலாகிய ∴பிளெக்ஸ் பிரஸ் வேர்ள் (Flex-Press-Whirl) இல், எல்லாப் பதிவுக்கருவிகளும் கடல் அலைகளின் ஒலியை ஒலிப்பதிவு செய்வதற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டது.
(2) அந்தந்த மணித்தியாலத்தின் படி கப்பலின் அமைவிடத்தை பதிவு செய்யவேண்டியது எந்த நாட்களில் என்பதை கப்பலின் தலைவன் தீர்மானிக்க முடியும்.
(3) ஒவ்வொரு மணித்தியாலத்தின் படி கப்பலின் அமைவிடத்தைப் பதிவு செய்வதற்காக, ஒவ்வொரு கடற்பயணத்தின்போதும் பயணி ஒருவரை நியமிக்க கொலம்பஸ் ஆவன செய்தார்.
(4) எந்தவொரு கப்பலினதும் அமைவிடத்தைக் கண்டறிய கூகுளிற்கு (google) முடியும் ஆதலால் கப்பலினால் அதனை பதிவுசெய்வது அவசியமற்றது.
(5) அண்மையில் மூழ்கிய எவர் - ரேஸ் (Ever - Race) எனும் கப்பலொன்று கண்டுபிடிக்கப்பட்ட அறிக்கைகளில், கப்பலின் நாளாந்த அமைவு மாத்திரமே பதிவாகியிருந்தது.

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**40.** புகைப்பட அச்சுப்பதித்தல் கருவியொன்றில் சிவப்பு, நீலம், மஞ்சள் ஆகிய மூன்று மூலவர்ணங்களை மாத்திரமே பயன்படுத்துகின்றன. ஒரு வழு காரணமாக மஞ்சள் நிறமும் நீல நிறமும் அவற்றுக்கிடையே இடமாறியிருந்ததோடு, அதன் விளைவாக, நிற விகாரமடைந்த புகைப்படங்கள் அச்சாகியிருந்தன. இந்த அச்சுப் பொறியில் அச்சிடும்போது மிகக் குறைந்த அளவு நிற விகாரம் ஏற்படுவது பின்வரும் எந்தப் புகைப்படத்திலாகும்?

(1) வெட்டுக்கிளி　　(2) வத்தாளைக்கிழங்கு　　(3) சந்திரன்
(4) கரட்　　(5) வானவில்

- இல **41, 42** ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.
  தொழிற்பயிற்சிப் பாடநெறியொன்றுக்கு ஆட்சேர்ப்பதற்காகப் பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. 2022 சனவரி 01 ஆந்திகதியன்று 18 வயதுக்கு குறையாது, 22 வருடங்களுக்கு மேற்படாது இருத்தல்.
2. குறைந்தபட்சம், தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (ICT), ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஒரே தடவையில் க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு :**

(i) ICT பாடத்தில் திறமைச் சித்தி பெறாத விண்ணப்பதாரிகள், பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சையில் திறமைச்சித்தி பெற்றிருப்பின், தாபனச் சபையின் இணக்கப்பாட்டுடன் கவனத்திற் கொள்ளப்படுவர்.

(ii) ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி பெறாத விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழியில் தகைமைகளை பூர்த்தி செய்யும் சோதனையொன்றுக்கு தோற்றி அதில் 50 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளும் இணக்கப்பாட்டுடன் கவனத்திற் கொள்ளப்படுவர்.

ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள தகவல்களின் படி,

விண்ணப்பதாரி எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் எனின் ........... *a* எனவும்
விண்ணப்பதாரி தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனின் .......................... *b* எனவும்
விண்ணப்பதாரிக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்கு பரீட்சைக்குத் தோற்ற வேண்டியிருப்பின் .............................................................................. *c* எனவும்
விண்ணப்பதாரி தாபன சபையின் இணக்கப்பாட்டினைப் பெற வேண்டுமெனின் ...... *d* எனவும்
முடிவெடுப்பதற்கு, தரப்பட்டுள்ள தரவுகள் போதாது எனின் ................................ *e* எனவும்
தெரிவுசெய்க.

**41.** 2000 ஜனவரி 01 ஆந் திகதி பிறந்த இலங்கையரான அருள், ஒரு தடவை மாத்திரம் க.பொ.த. (சாதாரண (தர)ப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதோடு தமிழ்மொழி, சைவநெறி, வரலாறு, விஞ்ஞானம், ICT, கர்நாடக சங்கீதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியைப் பெற்றுள்ளார்.

(1) *a*　　(2) *b*　　(3) *c*　　(4) *d*　　(5) *e*

**42.** 2003 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று பிறந்த இலங்கையரான சாவித்திரி, க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் ஒரே தடவையில் தமிழ் மொழி, சைவநெறி, வரலாறு, கணிதம், விஞ்ஞானம், ஆங்கில மொழி, கர்நாடக சங்கீதம், விவசாயம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி பெற்றுள்ளார். பொதுத் தகவல் தொழினுட்பப் பரீட்சையில் உயர்திறமைச் சித்தியைப் பெற்றுள்ளார்.


(1) *a*　　(2) *b*　　(3) *c*　　(4) *d*　　(5) *e*

[பக். 8 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

● **43** தொடக்கம் **44** ஆகிய வினாக்கள் கீழே உருவில் உள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

பாடசாலையொன்றில் க.பொ.த. (உயர் தர) தொழினுட்பவியல் பாடத்துறையைப் பயிலும் மாணவர் எண்ணிக்கையும் தகவல், தொடர்பாடல் தொழினுட்பம் (ICT) பாடத்தைப் பயிலும் மாணவரினது எண்ணிக்கையும் கீழே உருவில் காட்டப்பட்டுள்ளது.




**43.** தொழினுட்ப பாடத்துறையைச் சேர்ந்த எத்தனை மாணவர்கள் ICT பாடத்தை பயிலுகின்றனர்?
(1) 20 (2) 30
(3) 40 (4) 50
(5) 60

**44.** தொழினுட்பவியல் பாடத்துறையைச் சேர்ந்த எல்லா மாணவர்களும் "தொழினுட்பவியலுக்காக விஞ்ஞானம்" எனும் பாடத்தைக் கற்பது கட்டாயமானது. அதற்கமைய தொழினுட்பவியல் பாடத்துறையைச் சேர்ந்த எத்தனை மாணவர்கள் 'தொழினுட்பத்துக்கான விஞ்ஞானம்' எனும் பாடத்தைக் கற்கின்றனர்?
(1) 60 (2) 90
(3) 110 (4) 160
(5) 180

**45.** இவ்வினாவில் 1 தொடக்கம் 7 வரையில் காட்டப்பட்டுள்ள வாக்கியங்களுக்கு இடையே உள்ள *A*, *B*, *C*, *D*, *E* ஆகிய வாக்கியங்கள் சரியான வரிசை ஒழுங்கில் **அமையவில்லை.** இந்த ஏழு வாக்கியங்களுக்கும் இடையே தருக்கரீதியாக வரிசை ஒழுங்கை கட்டியெழுப்புவதற்காக அவற்றின் மிகப் பொருத்தமான ஒழுங்குமுறையைத் தெரிவுசெய்க.

1 - பலாமரம், வளர்வதற்கும் முதிர்ச்சியடைவதற்கும் நீரும், காற்றும், சூரிய ஒளியும் மாத்திரமின்றி போசணைக்கூறுகளும் அவசியமாகும்.

*A* - போசணைக்கூறுகள் இயற்கையாகவே உலோகங்கள், அல்லுலோகங்கள் என இரண்டு விதமானவையாகும்.

*B* - பலாமரம் அதன் வேர்களின் வழியே பொசுபரசு, பொற்றாசியம் ஆகிய இரண்டு வகைகளையும் அகத்துறிஞ்சும்.

*C* - வேர்களினால் NPK பெறப்படுவதோடு காபோவைதரேற்று எனப்படும் மற்றுமொரு பிரதான வகைக் கூறு, இலைகளில் உள்ள குளோரோபில் (பச்சையம்) உருமணிகள் மூலம் தொகுக்கப்படும்.

*D* - வளியில் அதிக அளவில் நைதரசன் அடங்கியுள்ளதெனினும் பலாமரம் அதன் நைதரசன் தேவையை வேர்கள் மூலமே பெற்றுக்கொள்கின்றது.

*E* - தாவரங்களுக்குத் தேவையான பிரதானமான உலோக, அல்லுலோகப் பதார்த்தங்கள் NPK எனக் குறிப்பிடப்படுகிறது.

7- NPK உடன் வேர்கள் மூலம் உறிஞ்சப்படும் ஏனைய கனியுப்புக்கள் மற்றும் காபோவைதரேற்று ஆகிய அனைத்தும் பலாமரத்தின் வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் தேவையான சகல ஆக்க அலகுகளையும் தொகுப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

(1) *A, D, E, B, C* (2) *A, D, E, C, B* (3) *A, E, D, B, C*
(4) *B, C, D, E, A* (5) *D, B, C, A, E*

[பக். 9 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**46.** கீழே தரப்பட்டுள்ள *A*, *B*, *C*, *D*, *E* ஆகிய ஒவ்வொரு பந்தியும் மூன்று வாக்கியங்களைக் கொண்டது. பொருளுள்ளவாறு ஒழுங்குமுறைப்படி வரிசைப்படுத்தக்கூடிய வாக்கியங்கள் அடங்கிய பந்தி அவற்றுள் எது?

*A* (*a*) ஒரு வருடத்தில் இரண்டு மழைக்காலங்கள் உள்ளன.
(*b*) ஒக்டோபர் தொடக்கம் டிசெம்பர் வரையிலான காலத்தில் அதிகளவான மழை வீழ்ச்சி கிடைப்பதோடு, மார்ச் தொடக்கம் மே வரையிலான காலத்தில் குறைந்தளவான மழை கிடைக்கின்றது.
(*c*) அதிக மழை வீழ்ச்சி கிடைக்கும் காலங்களில் நீர்நிலைகள், அணைகள் அனைத்திலும் நீர் நிரம்பியிருக்கும்.

*B* (*a*) டிசெம்பர் தொடக்கம் ஏப்ரல் வரையிலான ஒரு காலத்தில் மாத்திரம் பனை மரங்களில் பூக்கள் மலரும்.
(*b*) பெப்ரவரி தொடக்கம் யூன் வரையிலும், செப்ரெம்பர் தொடக்கம் நவம்பர் வரையிலுமான காலங்களிலும் ஆண்டில் இரண்டு தடவைகள் மரமுந்திரிகை மரங்களில் பூக்கள் மலரும்.
(*c*) தென்னை மரங்களில் ஆண்டு முழுவதும் பூக்கள் மலரும்.


*C* (*a*) ரோய், விளையாட்டில் கெட்டிகாரனாவதோடு பாடசாலையில் உள்ள அனைவரிடத்திலும் பிரபல்யமானவனாவான்.
(*b*) ரம்யா பாடசாலையில் பேச்சிலும், நாடகத்திலும் கற்றல் நடவடிக்கைகளிலும் திறமையானவளாவாள்.
(*c*) அதிபரும் பாடசாலை ஒழுக்காற்று குழுவினரும் இணைந்து ரோய், ரம்யா ஆகிய இருவரையும் பாடசாலை மாணவத் தலைவர்களாக நியமிக்குமாறு விதந்துரைத்தனர்.

*D* (*a*) லக்ஷ்மி நீர்ப்பாத்திரமொன்றை ஏந்திச்சென்ற போது மயக்கமடைந்து கீழே விழுந்தாள்.
(*b*) லக்ஷ்மி இடையிடையே தலைவலியால் அவதியுறுபவள்.
(*c*) லக்ஷ்மி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டாள்.


*E* (*a*) வங்கிகள், தனி எண் குறியீட்டினால் காட்டப்படும் மட்டத்தில் மிகக் குறைந்த வட்டி விகிதத்தின் கீழ் வீட்டுக்கடன் வழங்குகின்றன.
(*b*) அரசானது வங்கிகளில் நிலையான வைப்புகளுக்கான மற்றும் சேமிப்பு வைப்புகளுக்கான வட்டி விகிதத்தை தனி எண் குறியீட்டு மட்டம் வரை குறைத்துள்ளது.
(*c*) வட்டி விகிதங்களை குறைப்பதன் நோக்கம், சகல பிரஜைகளுக்கும் வீட்டுக்கடன் வழங்கும் அரச கொள்கைக்கு ஆதரவளித்தலாகும்.


(1) *A* (2) *B* (3) *C* (4) *D* (5) *E*


**47.** பின்வரும் சித்திரங்களினால் விவரிக்கப்படும் சம்பவத்தை கவனத்திற் கொள்க.



*A*


*B*


*C*


*D*


*E*


*F*

இச்சம்பவத்தின் சரியான ஒழுங்கைக் காட்டும் வரிசைப்படுத்தல் தொகுதி பின்வருவனவற்றுள் எது?

(1) *D, E, C, F, B, A* (2) *D, E, C, A, B, F* (3) *D, C, E, A, F, B*
(4) *B, C, D, E, A, F* (5) *B, D, C, E, A, F*

[பக். 10 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

- **48** தொடக்கம் **50** வரையிலான வினாக்கள் பின்வரும் உரையாடலை அடிப்படையாகக் கொண்டவை.

பாடசாலையிலிருந்து மீண்டும் வீட்டிற்கு வந்ததன் பின்னர் பிள்ளைகள் மூவர் பட்டம் விட்டு விளையாடுவதற்காக தமது தாயுடன் மைதானத்திற்குச் சென்றனர். அங்கு பிள்ளைகளின் ஸாம் மாமாவைச் சந்தித்தனர்.

கீழே *A* தொடக்கம் *L* வரை காட்டப்பட்டுள்ள சம்பாசணைகள் பிள்ளைகள் அவர்களது தாய், ஸாம் மாமா ஆகியோருக்கு இடையிலான உரையாடலைக் காட்டுகின்றன. எனினும் அவர்களுக்கு இடையிலான உரையாடல் சரியான ஒழுங்கு முறையில் இங்கு **தரப்படவில்லை.**

*A* - ஸாம் மாமா, கழுகுப் பட்டம் விடும் ராஜ் உங்களுக்கு தெரிகிறார். நீங்கள் ராசுத் தம்பியைக் கண்டீர்களா?

*B* - ஆம், அரை மணித்தியாலத்துக்கு முன்பு நான் அவரை நாகபாம்புப் பட்டமொன்றுடன் கண்டேன்.

*C* - ராஜ் அண்ணா, இங்கு எங்கேயும் நாகபாம்பு பட்டமோ ராசுவோ கண்ணில் படவில்லை. ஆனால் ஸாம் மாமா எம்மை நோக்கி வருவது தெரிகிறது.

*D* - ஆனாலும் இந்த மைதானத்தில் பெரிய வெளி காணப்படுகிறது. அதிகளவான மக்களும் இங்கு உள்ளனர். அதனால் ராசுவை இலகுவாக கண்டுபிடிக்க முடியாது.

*E* - ஸாம் மாமா, உங்களின் கொறோனாப் பட்டம் மிகச் சிறப்பானது. இதனைச் செய்தவர் யார்?

*F* - நான் திரும்பி வரும் வழியில் கோவிட் சோதனை நிலையமொன்று இருந்தது.

*G* - ராசுத்தம்பி எங்கே போனான்?

*H* - அவர் தனது நாகபாம்புப் பட்டத்தை விடப் போயுள்ளார்.

*I* - சரி நல்லது. நீங்கள் இளைய தம்பி ரணேயைக் கூட்டிக்கொண்டு போங்கள்.

*J* - நானும் எனது கழுகுப் பட்டத்தை விடப்போகிறேன்.

*K* - ராஜ், நீங்கள் பாடசாலை விட்டு திரும்பி வர தாமதமாகியது ஏன்?

*L* - நான் அதனை வேறொருவரின் உதவியுடன் செய்தேன். அவர் பட்டத்தை மின்னொளியால் வெளிச்சமாக்கினார்.

**48.** பின்வரும் எதில் தாயாருக்கும் மூத்த மகனுமாகிய ராஜ் இற்கும் இடையேயான உரையாடல் பகுதிகள் சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன?

(1) *K, F, H, G, J, I* (2) *K, F, G, H, J, I* (3) *K, F, I, G, H, J*
(4) *K, F, J, H, I, G* (5) *K, F, J, I, G, H*

**49.** பின்வரும் எதில் ஸாம் மாமாவிற்கும் இளைய சகோதரனாகிய ரணே இற்கும் இடையிலான உரையாடல் பகுதிகள் சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன?

(1) *A, B, E, D, L* (2) *B, A, D, L, E* (3) *A, B, D, E, L*
(4) *D, A, E, L, B* (5) *D, A, L, E, B*

**50.** முழு உரையாடலினதும் தருக்க ரீதியான ஒழுங்குமுறையைக் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?

(1) *K, F, G, H, J, I, C, A, B, D, E, L*
(2) *K, F, H, G, J, I, C, D, A, E, L, B*
(3) *K, F, I, G, H, J, C, D, A, E, L, B*
(4) *K, F, J, H, I, G, C, D, A, L, E, B*
(5) *K, F, J, I, G, H, C, D, A, B, L, E*

* * *

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,